அசல் வழக்கு எண். 125/2023 வா.சா.2 சேகர் த/பெ ராமன்

**<u>23.10.2024 குறுக்கு விசாரணை</u>**

1. நான் பிளஸ் டூ வரை படித்துள்ளேன். என் அலுவலகம் எங்கு உள்ளது என்றால் எனக்கு அலுவலகம் இல்லை. சார் பதிவாளர் அலுவலகத்திற்கு முன்பு தரையில் அமர்ந்து பத்திர எழுத்தராக பணி புரிகிறேன். காலை 9.00 மணிக்கு வந்தால் எனது பணி மாலை 6.00 மணி வரை இருக்கும் என்றால் சரிதான்.

2. நான் அடையபுலம் கிராமத்தை சேர்ந்தவர். நான் பத்திர எழுத்தர் அல்ல நகல் எழுத்தர் ஆவேன். நான் நகல்எழுத்தர் என்றாலும் பல பத்திரங்களை பார்த்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.21 கிரய பத்திரத்தில் பத்திரங்களின் உள்ள முத்திரைக்கு கீழே இடதுபுறத்தில் பத்திர எண்கள் அச்சிடப்பட்டிருக்கும் என்றும் ஆனால் அவ்வாறு வா.சா.ஆ.21ல் அச்சிடப்படவில்லை என்றால் சரிதான்.

3. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.21 ஆவணத்தில் கிரய பத்திரம் என்று எழுதப்பட்டுள்ளதா அல்லது கிரய ஒப்பந்த பத்திரம் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் கிரய பத்திரம் என்று தான் எழுதப்பட்டுள்ளது. அதனால் வா.சா.ஆ.21 கிரய ஒப்பந்த பத்திரம் அல்ல என்றும் கிரய பத்திரம் தான் என்றால் சரிதான்.

4. நான் 25 வருடங்களாக இந்த துறையில் வேலை செய்து வருகிறேன். பொதுவாக ரூ.100/-க்கு மேற்பட்ட மதிப்புடைய எந்த ஒரு ஆவணமும் சட்டப்படி பதிவு செய்யப்படவேண்டும் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். ரூ.20,000/- கொடுத்தது எனக்கு தெரியும். அந்த தொகை எந்த வகையான ரூபாய் 1000/-, 500/-, 200/-, 100/- நோட்டுக்களாக கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு நினைவில்லை. நான் சொல்வது போல் பணம் எதுவும் கொடுக்கப்பட வில்லை என்றும் பெறப்படவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளதால் தான் எந்த வகையான ரூபாய் நோட்டுக்கள் என்று நினைவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. பலராமன் என்னை இன்று காலை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரிதான். தற்போதும் பலராமன் என்னுடன் தான் உள்ளார் என்றால் சரிதான். என் பிரமாண வாக்கு மூலத்தில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் அக்ரிமென்ட் எந்த இடத்தில் வைத்து எழுதியதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மாலை 4.00 அல்லது 5.00 மணிக்கு வா.சா.ஆ.1 அக்ரிமென்ட் எழுதப்பட்டது.

6. பதிவு அலுவலகத்திற்கு முன்பு வா.சா.ஆ.1 ஆவணம் எழுத வரும்போது என்னுடன் வேறு பத்திர எழுத்தர்கள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. யாரும் இல்லை. அந்த சமயத்தில் பத்திர பதிவிற்குவந்தபொதுமக்கள்அங்கு இருந்தார்களா என்றால் நான் வழக்கமாக அமரும் இடத்தில் பொது மக்கள் யாரும் இல்லை அவர்கள் வேறு பக்கத்தில் இருந்தார்கள்.

7. பலராமன் பழங்காமூர் கிராமத்தில் வசித்து வருகிறார். அங்கிருந்து ஆரணி 5 கி.மீ தொலைவு இருக்கும். 14.07.2003 அன்று வேலை நாள் என்பதால் அங்கு பதிவு அலுவலகத்தில் கூட்டம் அதிகமாக இருந்ததா என்றால் காலையில் கூட்டமாக இருந்தது மாலை நேரத்தில் கூட்டம் இல்லை. பத்திரங்களை பலராமனே வாங்கி வந்தார்.

8. சாட்சி கையெழுத்து போட்ட தேவராஜ் என்பவர் இறந்துவிட்டார். ராமமூர்த்தி உயிருடன் உள்ளார். சாட்சி கையெழுத்து போட்ட தேவராஜ் என்பவர் பத்திர எழுத்தர் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சிகளின் முழு முகவரி எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.1ல் என் கையெழுத்துக்கு கீழே நான் நகல் எழுத்தர் என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

9. கிரய ஒப்பந்தத்திற்கு ஆவண வாசகங்கள் வேறு மாதிரி வரும். கிரய பத்திரத்திற்கு ஆவண வாசகங்கள் வேறு மாதிரி வரும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் பட்டா நெம்பர் குறிப்பிடப்பட வில்லை என்றால் சரிதான். ஆனால் பட்டா வழங்கப்பட்டதாக வாசகங்கள் உள்ளது என்றால் சரிதான்.

10. பலராமன் எனக்கு 25 வருடங்களாக பழக்கம். பலராமன் எனக்கு 25 வருட பழக்கம் என்பதால் பலராமன் கேட்டுக்கொண்டதற்கிணங்க என்னால் தயாரிக்கப்பட்ட ஆவணம் தான் வா.சா.ஆ1 என்றும், அதனால் தான் அந்த ஆவணத்திற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முதல் விசாரணையில் சொல்லி உள்ளவாறு 14.07.2003 அன்று ராஜேந்திரனும் சாட்சிகளும், என்னிடம் வரவில்லை என்றும், பலராமனும் வரவில்லை என்றும், பலராமன் பணம் எதுவும் கொடுக்கவில்லை ராஜேந்திரன் எந்த பணமும் பெற்று கொள்ளவில்லை என்றும், நான் கூறியுள்ளது போல வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டு அதில் ராஜேந்திரன் கையெழுத்திடவில்லை என்றும், நான் சொல்வது போல சாட்சிகள் கையெழுத்திடவில்லை என்றும், பலராமன் எனக்கு 25 ஆண்டு கால நண்பர் என்பதால் அவருக்காக இந்த தவறான ஆவணத்தை தயாரித்து ராஜேந்திரன் கையெழுத்திட்டது போல போர்ஜரியாக கையெழுத்திட்டு வா.சா.ஆ.1 எனது உதவியுடன் தயாரிக்கப்பட்டது என்றும், நண்பருக்காக பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.